# நேரு ஜாக்கெட்

*இன்னிக்கு டுடோரியல்ல நேரு ஜாக்கெட் எப்படி தைக்கறதுன்னு கத்துப்போம்.*



**தேவைப்படும் பொருள்கள்**

45” அகலத்துல 2 மீட்டர் பிரின்டட் துணி
45” அகலத்துல 2 மீட்டர் லைனிங் துணி
¼ மீட்டர் கேன்வாஸ் ஃப்யூசிங்
2 மீட்டர் ஜாக்கெட் ஃப்யூசிங்
நேரு ஜாக்கெட் டெம்ப்ளேட், இதை நீங்க எங்க வெப்சைடிலிருந்துடவுன்லோட் பண்ணிக்கலாம்.
மணிகோர்த்த பின்ஸ்
சாக்
கத்தரிக்கோல்
கை ஊசி
பொருத்தமான நூல்





நாம டெம்ப்ளேட் மார்க்கிங், துணி கட்டிங், தயாரித்தல் அப்புறம் பாக்கெட் அட்டாச் பண்றது, முன்பக்க, பின் பக்க பீசஸ ஜாயின் பண்றது, லைனிங் துணி தயாரித்தல், மெயின் துணியோட லைனிங் துணிய அட்டாச் செய்யறது, கடைசியா காலர் தயாரித்து, அட்டாச் செய்தல்

## டெம்ப்ளேட் மார்க்கிங் மற்றும் துணி கட்டிங்



உங்களுக்கு பிடிச்ச ஏதாவது துணிய எடுத்துக்கங்க. துணிய முழுசா பிரிச்சு ராங் சைட் மேல இருக்க மாதிரி விரிங்க. நேரத்தை மிச்சம்பிடிக்க நாங்க மெட்டீரியலை ஜாக்கெட் ஃப்யூங்சிங்கால ஃப்யூசிங் செய்திருக்கோம். துணி மேல www.ushasew.com லிருந்து டவுன் செய்த டெம்ப்ளேட்ட வைக்க வேண்டிய நேரம். முதல்ல முன்பக்கம்னு மார்க் பண்ணி உள்ள டெம்ப்ளேட்ஸ்-அ துணி மேல வைக்கலாம். மணிகோர்த்த பின்ஸ யூஸ் பண்ணி இந்த ரெண்டு டெம்ப்ளேட்ஸ சரியான இடத்தில வைச்சு பின் பண்ணனும். இது ஒரு முக்கியமான ஸ்டெப் ஏன்னா இது டெம்ப்ளேட்-அ துணி மேல செக்யூர் பண்றதால ட்ரேஸ் பண்ண ஈசியா இருக்கும். இது முடிஞ்சதும் சாக் எடுத்துட்டு துணி மேல டெம்ப்ளேட்ஸ ட்ரேஸ் பண்ணுங்க. வளைவான இடங்கள்ல கவனமா இருக்கணும், ஏன்னா இதுதான் இதை அழகாவோ இல்லை சொதப்பலாவோ மாத்தக்கூடியது.







இப்ப டெம்ப்ளேட்டிலிருந்து பின்-அ எடுத்துருங்க. பின்ஸ முதல்ல பின் குஷன்ல மறுபடியும் வைச்சிருங்க, இல்லாட்டி காயம்பட வாய்ப்பு இருக்கு. பின்ஸ நீக்கின பிறகு டெம்ப்ளேட்ஸ தனியா வைச்சிருங்க. கத்தரிக்கோல் எடுத்துகிட்டு பீசஸ கட் பண்ண ஆரம்பிங்க. இதை மெதுவா, துல்லியமா செய்யுங்க. கட் பண்ணி முடிஞ்சதும், முன்பக்க பீசஸ தனியா வைச்சிருங்க.







மீதி உள்ள துணிமேல, ரெண்டாவது செட் இடது, வலது, முன்பக்க டெம்ப்ளேட்ஸ வையுங்க. டெம்ப்ளேட்ஸ சரியான இடத்தில மணிகோர்த்த பின்ஸ யூஸ் பண்ணி பின் பண்ணனும். முன்பக்க மெயின் ரைட்லேந்து தொடங்கி இன்னொரு பீசுக்கு போங்க. பின் பண்ணின பிறகு, சாக் எடுத்துட்டு துணி மேல டெம்ப்ளேட்ஸ ட்ரேஸ் பண்ணுங்க. ட்ரேஸ் பண்றப்ப வளைவுகள்ல எச்சரிக்கையா இருக்கனும். முடிஞ்சதும், சாக்-அ வைச்சிட்டு செய்துக்கொங்க டெம்ப்ளேட்ஸ்லேந்து பின்ஸ நீக்கிருங்க. கத்தரிக்கோல எடுத்து, ட்ரேஸ் பண்ணின லைன்ஸ் மேல கட் பண்ணுங்க. இந்த ரொம்ப சின்ன பீசஸ கட் பண்றதுதான் ரொம்ப கஷ்டம், டெம்ப்ளேட்ஸ கவனமா கட் பண்றதை உறுதி வைச்சிருங்க, கட் பண்ணின பீசஸ தனியா செய்துக்கொங்க







மீதி உள்ள துணிய எடுத்துகிட்டு டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி மடிச்சு, பேக் டெம்ப்ளேட்டை அதுல வையுங்க. ஒரு டெம்ப்ளேட் மடிப்பு மேல இருக்கறதை கவனிங்க, அந்தப் பக்கத்தை துணி மடிப்பு மேல வைக்கணுங்கறதை உறுதி செய்யுங்க. மணிகோர்த்த பின்ஸ யூஸ் பண்ணி டெம்ப்ளேட்-அ துணில பின் பண்ணனும். பின் பண்றப்ப துணியின் ரெண்டு லேயர்ஸ்லயும் பின் நுழையுதான்னு என்ஷ்யூர் பண்ணிக்கணும். இது முடிஞ்சதும், சாக்-ஆல துணிமேல டெம்ப்ளேட்ஸ ட்ரேஸ் பண்ணுங்க. இந்த ஸ்டெப்-அ மெதுவா, துல்லியமா செய்யுங்க. பின்ஸ நீக்கின பிறகு டெம்ப்ளேட்ஸ தனியா வைச்சிருங்க. ட்ரேஸ் பண்ணின டெம்ப்ளேட்ஸ கத்தரிக்கோலால கட் பண்ணுங்க. மெதுவா, சீரா பேக் பீசை கட் பண்ணுங்க. கட் பண்ணினதை தனியா வையுங்க.







மீதி உள்ள துணிய மறுபடியும் மடிச்சு காலர் டெம்ப்ளேட்ட சீம் அலவன்ஸ் மேல வையுங்க. ரெண்டு முனைகள்லயும் அதன் இடத்தில வைச்சு பின் பண்ணுங்க. சாக்கால துணிமேல அதை டிரேஸ் பண்ணுங்க. வளைவான எட்ஜ்ஸ் கொஞ்சம் கஷ்டமா இருக்கும், ஆனா பயிற்சிதான் ஒருத்தரை முழுமையாக்கும். அடுத்து, பின்ஸ நீக்கி, டெம்ப்ளேட்ஸ தனியா வைச்சிருங்க. ஆனா, கட் பண்ணும்போது, நாம துணிய மறுபடியும் பின் பண்ணுவோம் ஏன்னா ரெண்டு காலர் பீசஸ்க்கும் கன்சிஸ்டன்டா ஒரு ஷேப் கெடைக்கறது முக்கியம். இந்த பீசஸ கத்தரிக்கோலால கட் பண்ணிரணும். கட் பண்ணி முடிஞ்சதும், பீசஸ தனியா வைச்சிருங்க





மீதி உள்ள துணிய இப்பவே தூக்கிப்போட்ராதீங்க, இதுக்கு மேல ஜாக்கெட்

பாக்கெட் டெம்ப்ளேட்ட வைச்சு அதை சரியான இடத்தில பின் பண்ணுங்க. சாக்-ஆல டெம்ப்ளேட்ட ட்ரேஸ் அப்புறம் பண்ணுங்க பின்ஸ நீக்கி, டெம்ப்ளேட்ஸ தனியா வைச்சிருங்க. பீசஸ கட் பண்ணி எடுங்க.




இதுவரை நாம ரெண்டு மெயின் இடது, வலது பீசஸ் கட் பண்ணியிருக்கோம், அப்புறம் ரெண்டு முன் பீசஸ். ரெண்டு காலர் பீசஸ். அப்புறம் ஒரு பாக்கெட். பின்பக்க பீசும் தயாரா வைச்சிருக்கோம் .




லைனிங் துணிய எடுத்து அதை முழுசா விரிங்க. இது ராங் சைட், அது ரைட் சைட். ராங் சைட்-ல் இடது, வலது முன்பக்க லைனிங்னு மார்க் செய்யப்பட்ட டெம்ப்ளேட்ஸ வையுங்க, அதைத் தொடர்ந்து ஜாக்கெட் பாக்கெட் டெம்ப்ளேட்-அ வைங்க. ஏற்கெனவே செய்த அதே பிராசஸ ரிபீட் பண்ணுவோம். இந்த டெம்ப்ளேட்ஸ மணிகோர்த்த பின்சால துணில பின் பண்ணனும். மொத்த டெம்ப்ளேட்டயும் பின் பண்ணுங்க, ஏன்னா ட்ரேஸ் பண்ணும்போது துணி அசையாம இருக்கிறதை இதுதான் உறுதி செய்யும். இது முடிஞ்சதும், டெம்ப்ளேட்ட துணி மேல வைச்சு ட்ரேஸ் பண்ணுங்க. முன்பக்க லைனிங் டெம்ப்ளேட்ல தொடங்கி மற்ற டெம்ப்ளேட்ஸ நோக்கி போங்க. வளைவான விளிம்புகள சுற்றி ட்ரேஸ் பண்றப்ப கை ஆடாம இருக்கறதை உறுதி செய்துக்கங்க. ட்ரேஸ் பண்ணி முடிச்சதுக்கு அப்புறம் பின்ஸ நீக்கி, டெம்ப்ளேட்ஸ தனியா வைச்சிருங்க











ட்ரேஸ் பண்ணின லைன்ஸ்ல கட் பண்ணுங்க. இந்த ஸ்டெப்-அ மெதுவா கவனமா செய்யணும், ஏன்னா ஷேப் மற்றும் அளவுகள் சரியா இருக்கறது முக்கியம். இந்த மூணு பீசஸ கட் பண்ணி முடிச்சதும், துணிய ஃப்ளிப் பண்ணி ரைட் சைட் உங்களை நோக்கி இருக்க மாதிரி வைச்சிட்டு டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி மடியுங்க. டெம்ப்ளேட்ஸ சரியான இடத்தில மணிகோர்த்த பின்ஸ யூஸ் பண்ணி பின் பண்ணனும். சாக் வைச்சு டெம்ப்ளேட்ஸ ட்ரேஸ் பண்ணுங்க. ட்ரேஸ் பண்ணி முடிச்சதும் முன்ன மாதிரி பின்ஸ நீக்கி, டெம்ப்ளேட்ஸ தனியா வைச்சிருங்க. கட் பண்றப்ப நல்லா அசையாம இருக்க துணில மறுபடியும் பின் பண்ணிக்கலாம். ட்ரேஸ் பண்ணின லைன்ஸ்ல கத்தரிக்கோலால கட் பண்ணுங்க.





இதுவரை நாம லைனிங் துணியிலிருந்துமுன்பக்க இடது, முன்பக்க வலது, பின்பக்கம் அப்புறம் ஜாக்கெட் பாக்கெட் பீசஸ் கட் பண்ணியிருக்கோம். இந்த பீசஸ தனியா வையுங்க.





அடுத்து, ஃப்யூசிங் துணிய எடுத்து அதை பாதியா மடிங்க. காலர்னு மார்க் பண்ணின டெம்ப்ளேட்ட துணி மேல வைச்சு அதை ட்ரேஸ் பண்ணுங்க. இது முடிஞ்சதும் அந்த பீஸ கட் பண்ணி எடுங்க. அவ்ளோதான், முதல் ஸ்டெப் முடிஞ்சுது.







### ஸ்டெப் 2 பாக்கெட் தயாரித்தல், அதை முன்பக்க துணியுடன் அட்டாச் செய்தல்





ரெண்டு ஜாக்கெட் பாக்கெட் பீசஸ், மெயின் துணி, அப்றம் லைனிங் துணிய எடுத்துக்கங்க. இந்த ரெண்டு துணியையும் டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கறா மாதிரி அலைன் பண்ணிகிட்டு அதை டாப்ல சரியான இடத்தில வைச்சு பின் பண்ணுங்க. இவற்றை ஒண்ணா வைச்சு தைக்கலாம்.




பின் பண்ணின துணிய உஷா ஒன்டர் ஸ்டிச் பிளஸ் தையல் மிஷினுக்கு கொண்டு வந்து, ஜாக்கெட் பாக்கெட்டின் டாப் எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணுங்க, பேட்டன் ஸ்டிச் செலக்டார 'ஏ'ல செட் பண்ணுங்க, இது நேர் தையலுக்கானது அப்புறம் ஸ்டிச் லெந்த் டயலை 2.5க்கு செட் பண்ணுங்க. தைக்க ஆரம்பிங்க. முனைக்கு வந்த பிறகு பிரஸ்ஸர் ஃபூட்-அ லிஃப்ட் பண்ணி நூலை கட் பண்ணிட்டு பின்-அ நீக்கிருங்க. ஃபினிஷிங் பெட்டரா இருக்க அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க.




இப்ப நாம ஜாக்கெட் பாக்கெட்-ன் டாப் முனைய தைச்சிட்டோங்கிறதை நீங்க பாக்கலாம். பாக்கெட்டை ஓபன் பண்ணி டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி ராங் சைட்ல மடிங்க. பக்கங்கள் முழுசா ஒரு கால் அங்குல மார்ஜின் விடணுங்கறதை மறக்காதீங்க.






இந்த மடிப்பை செட் பண்ணவும் தைக்க ஈசியா இருக்கவும், ஜாக்கெட் பாக்கெட்-அ அயர்ன் பண்ணனும். மறுபடியும் பின்நோக்கி மடிக்கறதுக்கு முன்னால அதை முழுசா அயன் பண்ணுங்க. ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி எல்லா பக்கங்கள்லயும் கால் அங்குல அளவுக்கு இடம் விடுங்க. முனையில அயர்ன் பண்றது ஈசியா இருக்க துணிக்கு நோட்சஸ் கொடுங்க பாக்கெட் எட்ஜ லைனிங் மேல மடிச்சு ஸ்லாஷ் பண்ணினப்பறம் மடிப்பு மேல அயர்ன் பண்ணனும். அயர்ன் பண்ணும்போது கைய சுட்டுக்காம எச்சரிக்கையா இருங்க. தொடர்ந்து மடிச்சிட்டே அதுக்குமேல அயர்ன் பண்ணுங்க.




அயர்ன் பண்ணி முடிச்ச பிறகு, ஜாக்கெட் பாக்கெட்-அ தனியா வைச்சிட்டு முன்பக்க இடது துணிய வெளிய எடுங்க. ரைட் சைட் மேல இருக்க மாதிரி வைச்சிட்டு 10 டாப்லேந்து அங்குலம் அளந்துட்டு மார்க் பண்ணிக்கொங்க




அயர்ன் செய்த ஜாக்கெட் பாக்கெட்-அ 10 அங்குல மார்க் அடியில வையுங்க. இது நேரா. சுருங்காம வைக்கப்படணும் இடது வலது ரெண்டுக்கும் நடுவுல இருக்கணுங்றதை உறுதி செய்துக்கணும். எல்லா பக்கங்கள்லயும் சரியான இடத்தில வைச்சு பின் பண்ணுங்க. நாம டாப்-அ தைக்காம விட்டுட்டு விளிம்புகளை தைக்கணும்.






பிரஸ்ஸர் ஃபூட் அடில ஜாக்கெட் பாக்கெட்-ன் எட்ஜ அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. தைச்சிட்டே பின்ஸ நீக்கிட்டே வாங்க, எட்ஜ் வந்த பிறகு பிவேட் டெக்னிக்கை யூஸ் பண்ணுங்க, இதன்படி நாம ஊசிய லிஃப்ட் பண்ணாமலே துணிய திருப்ப முடியும், இப்டி செய்யறதால அது முழுக்க ஒரே தையலா இருக்கும். முடியற இடத்தில ஒரு ரவுண்ட் ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க, இந்த ஸ்டெப் மூலம் நேர் தையல்கள் செக்யூர் பண்ணிக்கலாம். அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. இப்ப நாம ஜாக்கெட் பாக்கெட்ட மெயின் துணியோட தைச்சிட்டோம் பாருங்க.




**ஸ்டெப் 3 ஷோல்டர்ஸ் தைத்து முன்பக்க, பின் பக்க பீசஸ் ஜாயின் செய்தல்**




இப்ப அடுத்த ஸ்டெப், இன்னொரு மெயின் முன்பக்க துணிய எடுங்க. பின் டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி பேக் துணிய ரெண்டு முன்பக்க துணி மேல ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கறா மாதிரி வைங்க. ஷோல்டர்ஸ சரியாவைச்சு அவற்றை பின் பண்ணுங்க. இதை ரெண்டு பக்கங்களுக்கும் செய்யுங்க. இப்ப நாம ஷோல்டர்ஸ தைக்கலாம்.





பின் பண்ணின துணிய உஷா ஒன்டர் ஸ்டிச் பிளஸ் தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க ஷோல்டரை பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. மெதுவா கடைசி வரை தையுங்க. கடைசில ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க. ஒரு பக்கம் முடிஞ்சதும் இன்னொரு ஷோல்டரை தைக்க மறக்காதீங்க. நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.

**ஸ்டெப் 4 லைனிங் துணி தயாரித்தல்**




இப்ப லைனிங் துணிய பாக்கலாம். முன்பக்க லைனிங் பீசஸ் அப்றம் மெயின் துணில நாம கட் பண்ணின ரெண்டாவது முன்பக்க பீசஸயும் எடுங்க. டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி அவற்றை வையுங்க. ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கறா மாதிரி லைனிங் துணி மேல மெயின் துணிய வைச்சு சரியான இடத்தில பின் பண்ணுங்க. இன்னொரு பக்கத்துக்கும் இதையே செய்யுங்க.






இதை நாம விளம்புல ஒரு ரவுன்ட் நேர் தையல் போட்டு ஒன்னா தைக்கலாம். பின் பண்ணின துணிய பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. தைச்சிட்டே பின்ஸ நீக்கிட்டே வாங்க, முடியற இடத்துக்கு வந்த பிறகு தைக்கறதை நிறுத்திட்டு அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. இந்த பீஸ தனியா வைச்சிட்டு இன்னொரு பீசுக்கும் இதை பிராசஸ ரிபீட் பண்ணுங்க. நேர் தையல் போடற ஒவ்வொரு தடவையும் ஆரம்பத்திலயும் முடியற எடத்திலயும் கடைசில ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க. இது தையலை செக்யூர் பண்ண உதவும். இது முடிஞ்சதும் அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.




நாம லைனிங் மற்றும் மெயின் துணியை ஒன்னா சேர்த்து தைச்சிட்டோம்னு நீங்க பாக்கலாம். இப்ப, மடிப்பை திறந்து அதுக்கு மேல அயர்ன் பண்ணுங்க இது நமக்கு மடிப்பை செட் பண்ணவும் தையல் உள்ள செட்டில் அகறதையும் உறுதி செய்யும். ரெண்டு துணிகளையும் அயர்ன் பண்ணுங்க.







அயர்ன் பண்ணின துணிகளை எடுத்து ரைட் சைட் மேல இருக்க மாதிரி வைங்க. இப்ப பின்பக்க லைனிங் துணிய இதுக்கு மேல ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கறா மாதிரி வையுங்க. ரெண்டு ஷோல்டர்சயும் மேட்ச் பண்ணி சரியான இடத்தில பின் பண்ணுங்க.




பின் பண்ணின பகுதிய மடிக்கலாம். பின்ஸ நீக்கிட்டு ஷோல்டரை பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. இது முடிஞ்சதும், இன்னொரு பக்கத்துக்கும் இதையே செய்யுங்க. நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.

**ஸ்டெப் 5 மெயின் துணியுடன் லைனிங் துணியை அட்டாச் செய்தல்**




ஷோல்டர்ஸ் தைச்ச பிறகு, லைனிங் துணிய தனியா வெச்சிட்டு மெயின் துணிய எடுங்க. முழுசா விரிச்சு ரைட் சைட்-அ உங்களை பாத்தா மாதிரி வெச்சிட்டு அதுக்கு மேல லைனிங் துணிய ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கறா மாதிரி வையுங்க.




மெயின் துணிய லைனிங் துணியோட அட்டாச் பண்ண ஆர்ம்ஹோல்ஸ்யும் பக்கங்களையும் தைக்கணும். அட்டாச் ஆகிட்ட பிறகு, சைட் சீம் தைக்கணும். ஆனா அதுக்கு முன்னால டுடோரியல்ல காட்டின மாதிரி ரெண்டு சைட்ஸலயும் பாட்டமிலிருந்து 3.5 இன்ஞ்ச் மார்க் பண்ணிக்கணும். இதுக்கு பின்னால உள்ள காரணத்தை நாங்க அப்புறம் டுடோரியல்ல சொல்லுவோம்.







முதல்ல, லைனிங், மெயின் துணிகளை அட்டாச் செய்யற வேலைய பார்ப்போம், துணிய உஷா ஒன்டர் ஸ்டிச் பிளஸ் தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. இதுல குறிப்பிட்டிருக்க மாதிரி இப்ப நாம துணிகளை நெக்லைன் எக்ஸ்டன்ஷனிலிருந்து தைக்கப்போறோம். நெக்லைன் எக்ஸ்டன்ஷனிலிருந்து தொடங்கலாம். எட்ஜ்ஸ்ல பிவோட் டெக்னிக் யூஸ் பண்ணி தொடர்ந்து தையுங்க.








இப்ப ஜாக்கெட் ஓபனிங்கிலிருந்து மெதுவா பாட்டம் வரை போங்க, சைட்ல 3.5 அங்குல மார்க் வரை போய் நிறுத்துங்க, இன்னொரு பக்கத்துக்கு மூவ் பண்ணி இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. நெக்லைனை சுற்றி ஒரு அங்குலம் தையல் போடணும். அப்புறம் இதுல குறிப்பிட்டிருக்க மாதிரி ஜாக்கெட் ஓபனிங்குல தொடர்ந்து தைக்கணும். நெக்லைன்ல தொடங்கி, மெதுவா, சீரா கீழ ஜாக்கெட் ஓபனிங்க தைச்சிட்டே பாட்டம் அப்புறம் பக்கங்களை நோக்கி போங்க, 3.5 அங்குல மார்க் வரை போய் நிறுத்துங்க.



















இப்ப பின் பக்கத்துக்கு போகலாம் துணிய மடிங்க அப்பதான் பின் பக்கத்துலயும் 3.5 அங்குல மார்க் கிரியேட் பண்ண முடியும். இடது, வலது ரெண்டு பக்கங்களுக்கும் இதைச் செய்யுங்க. இது முடிஞ்சதும், மார்க் பண்ணின பாயிண்டிலிருந்து, பாட்டம்-லைன் முழுவதும் அப்புறம் எதிர் பக்கத்தில மார்க் பண்ணின பாயின்ட் வரை தைக்கணும். முழுக்க ஒரே நேர் தையல் வருவதை உறுதி செய்ய பிவோட் டெக்னிக் யூஸ் பண்ணுவோம், இது முடிஞ்சதும், அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க.

அடுத்து, ஆர்ம்ஹோல்ஸ தைக்கணும். வெறும் ஆர்ம்ஹோல்ஸ ஜாயின் பண்ணிட்டு ஆர்ம்ஹோல் முடியற இடத்திலிருந்து 3.5 அங்குல மார்க்-அ விட்ருணும் இன்னொரு சைட்லயும் இதே மாதிரி செய்யுங்க, இது முடிஞ்சதும் துணியோட வட்டப் பகுதிகள்ல ஆர்ம்ஹோல் மாதிரி நோட்சஸ் கிரியேட் பண்ணுவோம், அப்புறம் டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி பாட்டம் ஹெம் பண்ணுவோம். அப்பதான் உடுத்திக்கும்போது துணி படிஞ்சு இருக்கும். ஆர்ம்ஹோல்ல தொடங்கி பாட்டம் ஹெம்க்கு போங்க. அதோட நெக்லைன் ஸ்லாஷ் பண்ணிட்டு இதுல காட்டியிருக்க மாதிரி கார்னர் அலவன்ஸ ட்ரிம் பண்ணனும். இன்னொரு சைட்லயும் இதே மாதிரி செய்யுங்க. ஆர்ம்ஹோல்லயும் பாட்டம் ஹெம்லயும் நோட்சஸ் கிரியேட் பண்ணுவோம். அப்புறம் இதுல காட்டியிருக்க மாதிரி கார்னர் அலவன்ஸ ட்ரிம் பண்ணனும்.

**ஸ்டெப் 6 சைட் சீம்ஸ் ஃபினிஷிங்**

இப்ப சைட் சீம் வேலைய பாக்கலாம். முன் பக்க சீம் அப்றம் பின்பக்க சீம ஒன்றா சேர்த்து தைக்கப்போறோம். ஆனா மெயின் துணிகள்ல மட்டும்தான் தைக்கணும். ரெண்டு துணிகளையும் பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. ஸ்லிட்டிலிருந்து தொடங்கி ஆர்ம் ஹோல் நோக்கி தைக்க ஆரம்பிங்க. ஆர்ம்ஹோல்ஸ் பக்கமா வந்த உடனே இவை சரியா அலைன் ஆகியிருக்கான்னு செக் பண்ணிட்டு தொடர்ந்து அது மேல தையுங்க. முன், இப்ப நாம லைனிங் துணில ஒரு தொடர் தையல் போடணும். முன், பின்பக்க லைனிங் பீசஸ ஒன்றா இணைங்க. ஸ்லிட்டிலிருந்து சுமார் 5 அங்குலத்துக்கு வந்து சேர்றவரை தையுங்க. தையலை லாக் பண்ணிட்டு நூலை கட் பண்ணுங்க. லைனிங்க அப்படியே விட்டுட்டு மெயின் துணில கடைசில வரை தொடர்ந்து தைங்க. மெயின் துணி மேல மட்டும் தைச்சு அப்புறம் தொடர்ந்து லைனிங் துணி மேல தையுங்க.




முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க. இப்ப நாம சைட் சீம்-ன் லைனிங் பகுதிய ஓபனா விட்ருக்கறதை நீங்க பாக்கலாம். இதை அப்புறமா கையால ஹெம் பண்ணனும். இன்னொரு சைட் சீம் தைக்க இதே புரொசீஜரை ரிபீட் பண்ணனும்.




நீங்க தைச்சு முடிச்சது பாக்க இப்படி இருக்கணும். எல்லா மடிப்புகள் மேலயும் அயர்ன் பண்ணனும். கீழேந்து தொடங்கி ஜாக்கெட் ஓபனிங் வரை அயர்ன் பண்ணனும். ஆர்ம் ஹோல்ஸ் அயர்ன் பண்ண மறக்காதீங்க. இது துணிக்கு ஒரு சுப்பீரியர் ஃபினிஷ் கொடுக்கும் அதனால






இது ஒரு முக்கியமான ஸ்டெப், முன்பக்க மடிப்பு, பாட்டம், ஆர்ம் ஹோல்ஸ் அப்புறம் சைட் சீம் எல்லாம் அயர்ன் பண்ணியாச்சு.




**ஸ்டெப் 7 காலர் தயாரித்தல், அதை அட்டாச் செய்தல்**




கடைசி ஸ்டெப், காலர் அட்டாச் செய்தல். துணிய தனியா வைச்சிட்டு காலர் பீசஸ் எடுங்க. உங்ககிட்ட ரெண்டு மெயின் துணி பீசஸ் அப்புறம் ரெண்டு ஃப்யூசிங் துணி பீசஸ் இருக்கணும். மெயின் துணியோட காலர் பீசஸ்ல ஒன்றை திருப்பிகிட்டு அதுக்கு மேல டுடோரியல்ல காட்டின மாதிரி ஃப்யூசிங் துணிய வையுங்க. அப்புறம் ரெண்டு துணிகளையும் அயர்ன் போர்ட்ல வைச்சு உஷா அயர்ன்-அ எடுத்து இந்த ரெண்டு பீசஸயும் மெதுவா மெயின் துணி மேல ஃப்யூசிங் துணிய பிரஸ் பண்ணி அட்டாச் பண்ணுங்க. அடுத்து, இன்னொரு ஃப்யூசிங் துணிய இந்த மெட்டீரியல் மேல வைச்சு மறுபடியும் ஒன்ணா சேர்த்து பிரஸ் பண்ணுங்க.













இது முடிஞ்சதும், காலர் பீஸ ஃபிளிப் பண்ணுங்க அப்ப ரைட் சைட் உங்கள நோக்கி திரும்பும் அதுக்கு மேல இன்னொரு மெயின் துணி பீஸ ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கறா மாதிரி வையுங்க. நாம சைட்ஸ் அப்றம் டாப் சைடையும் தைக்கப்போறோம். காலர் பீஸ உஷா ஒன்டர் ஸ்டிச் பிளஸ் தையல் மிஷினுக்கு கொண்டு வந்து தைக்க ஆரம்பிங்க. மூணு பக்கங்கள் முழுவதும் பிவோட் டெக்னிக் யூஸ் பண்ணி ஒரே நேர் தையல் போடறதை உறுதி செய்யுங்க. முடிஞ்சதும் அதிகமான நூலை கட் பண்ணிருங்க.






இந்த மூணு சைட்ஸயும் தைச்சிட்டதை நீங்க பாக்கலாம். இப்ப சீம் அலவன்ஸ மடிச்சு டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி அதுக்கு மேல அயர்ன் பண்ணுங்க. ஒரு நேரத்துல ஒரு பக்கத்திலதான் செய்யணும். இது முடிஞ்சதும், காலரை திருப்பிகிட்டு மறுபடியும் அது மேல அயர்ன் பண்ணுங்க. இப்ப காலரை முடிச்சாச்சு, இதை நேரு ஜாக்கெட்டோட அட்டாச் பண்ணிரலாம்.







மெயின் துணிய வெளிய எடுங்க. காலர் துணியோட தைக்காத பகுதிய நெக்லைன்ல உள்பகுதிலேந்து டுடோரியல்ல காட்டின மாதிரி பின் பண்ணுங்க. மெயின், லைனிங் ரெண்டு துணிலயும் பின் நுழையறதை உறுதி செய்துக்கங்க. இது முடிஞ்சதும், பின் பண்ணின பீசஸ உஷா மெஷினுக்கு கொண்டு வந்து தைக்க ஆரம்பிங்க. தெச்சிட்டு பின்ஸ நீக்கிட்டு மெதுவா காலரை சுற்றி தையுங்க.





தெச்சு முடிச்சதும், காலர்ல உள்ள தைக்காத பக்கத்தை கையால ஹெம் பண்ணனும். சீம் அலவன்ஸ அடியில மடிச்சு அதுக்கு மேல ஒன்றை வெச்சு டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி அதை உள்நோக்கி மடிங்க. கிட்டத்தட்ட முடிஞ்சிருச்சு! ஃபினிஷிங் டச்சஸ்க்கு அப்றமா தைக்கலாம்னு விட்ருந்த கைட் சீம்ஸ ஹெம் பண்ணி முடிங்க. லைனிங் துணிகளை ஒன்னா சேர்த்து அவற்றின் மேல தையுங்க. இதை ரெண்டு சைட்ஸ்க்கும் செய்யுங்க. முடிச்சதும், அதிகப்படியான நூலை கட் பண்ணிட்டு நீங்க தைச்சதை சரிபாருங்க.




அவ்வளவுதான் முடிஞ்சிருச்சு. நேரு ஜாக்கெட்-அ உங்களுக்கு விருப்பமான முறைல அழகுபடுத்திக்கலாம். நாங்க ஒரு மேட்சிங் ஆக்ஸசரியும் ஒரு பிரைட் கலர் பாக்கெட் ஸ்கொயரையும் சேர்த்திருக்கோம். இது எவ்வளவு ஸ்டைலிஷா இருக்குல்ல? திருமண சீசனுக்கு இருக்க வேண்டிய அவசியமான, சரியான டிரெஸ். கமென்ட் பகுதில நீங்க வேற என்ன பாக்க விரும்பறீங்கன்னு சொல்லுங்க. இந்த டுடோரியல லைக் பண்ண மறக்காதீங்க, வளர்ந்து வரும் உங்க டைலர் நண்பர்களோட ஷேர் பண்ணுங்க.